J.M.C - N.

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 27 செவ்வாய்க்கிழமை (10.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 112

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## ஓமந்தை நோக்கி மோட்டார் தாக்குதல்

(கொழும்பு)

ஓமந்தைச் சாவடி மீது விடுதலைப்புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தியுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 2.25 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இத் தாக்குதலினால் மக்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டது எனவும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

## சமாதானப் பேச்சுக்கள் குறித்து விடுதலைப்புலிகளுடன் பேசவில்லை

### கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது குறித்து கருத்துக்களை விடுதலைப்புலிகளிடம் பரிமாறிக் கொள்ளவில்லை என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொபினூர் ஓமர்சன் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயாராகவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக (04 ஆம் பக்கம் பார்க்க)

## சீரற்ற காலநிலை காரணமாக சில தினங்கள் மழை தொடரும்

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக அடுத்த சில தினங்களுக்கு கடும் மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் ஏற்படும் இடி, மின்னல் தொடர்பாக மக்களை அவதானிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இடைக்காலப் பருவப் பெயர்ச்சி காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் கடும் மழை பெய்து வருகின்றது. (04 ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்த உடன்படிக்கை இல்லாமல் பேச்சுவார்த்தையை நடத்த முடியாது

## அமைச்சர் டிலான் பெரேரா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஆக்கபூர்வமாக செயற்படுவதுடன் சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை முன்வைக்க வேண்டும். இதற்கு தற்போது நடைமுறையிலிருக்கும் போர் நிறுத்த உடன்படிக்கையைப் பலப்படுத்த வேண்டும். போர் நிறுத்த உடன்படிக்கையில்லாமல் பேச்சுவார்த்தையை நடத்த முடியாது என நீதி மற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.**

(04 ஆம் பக்கம் பார்க்க)

## 3 நாள்களாகத் தொடரும் மழையில் இடம்பெயர்ந்த மக்கள் பரிதவிப்பு

மட்டக்களப்புப் பிரதேசத்தில் கடந்த 3 நாள்களுக்கு மேலாக பெய்து வருகின்ற கடுமையான மழை காரணமாக அங்கு கூடாரங்களில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களில் அநேகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாவனைக்குதவாத கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில் நிலத்துக்கு எந்த வித தரை விரிப்பும் வழங்கப்படாததனால் தாம் மிக கஷ்டப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

உணவுப் பிரச்சினை ஒருபுறத்தில், இருக்கின்ற கூடாரங்களில் மழை நீர் உட்புகும் நிலையில் கூடாரங்களுக்குள் இருக்க முடியாத நிலையில் நித்திரையின்றி விழித்திருப்பதாக அவர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்துள்ளார்கள்.

இதேவேளை தற்போதுள்ள கூடாரங்களுக்குப் பதிலாக மாற்றுக் கூடாரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மண்முனை வடக்கு பிரதேச உதவிச் செயலர் என்.வில்வரத்தினம் தெரிவித்துள்ளார். (ச-3)

## கடற்படையினரை கண்டித்து மீனவர் பேரவை ஆர்ப்பாட்டம்

(சென்னை)

தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதைக் கண்டித்துத் தமிழக மீனவர்கள் பேராயத்தைச் சேர்ந்தவர்கள் சென்னையில் நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை மெமோரியல் பூங்காவுக்கு முன்பாக இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை நடைபெற்றது. இந்தஆர்ப்பாட்...

# தொடரும் யுத்தம் காரணமாகவே மனித உரிமைகள் மீறப்படுகின்றன

## மனோ கணேசன் எம்.பி. உரை

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் யுத்தம் காரண...

உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நாட்டில் அபாண்டமான மனித உரிமீறல்கள் நடக்கின்றன. அதற்குக் காரணமாக இருப்பது பாரிய யுத்தமே. இவ் இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு முன்வைக்காமல், அதேவேளை அபாண்டமான முறை...

முன்பாக இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை நடைபெற்றது. இந்தஆர்ப்பாட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினர்கலந்து கொண்டனர். கடந்த மாதம் தமிழக மீனவர்கள் ஐந்து பேர் இலங்கைக் கடற்படையினரால்சுட்டுக் கொல்லப்பட்டு ஒரு வாரத்திற்குள் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கடந்த வாரம் மீண்டும் நடத்திய (04 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் யுத்தம் காரணமாகவே மனிதஉரிமைகள் மீறப்படுவதாகக் காணாமல் போனோர் தொடர்பான மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர் குறித்து கொழும்பில் நேற்று நடைபெற்ற தேசிய மாநாட்டில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலதரப்பட்டோர் கலந்து கொண்டனர்.

பிரச்சினைக்கு நியாயமான தீர்வு முன்வைக்காமல், அதேவேளை அபாண்டமான முறையிலே மனிதஉரிமை மீறல்களை மீறிக் கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினையைப் பொறுத்தவரையிலேயே எவ்விதமான பேச்சுவார்த்தைக்கும் தயாராகவிருப்பதாக அவர் மேலும் கூறினார். (ச-3)

# பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு சர்வதேச சமூகம் திடசங்கற்பம்



## புலிகளை பேச்சுக்கு அழைக்கின்றார் ஹோகன்ன

(கொழும்பு)

சார்க் வலயத்தில் பயங்கரவாதத்தை அடியோடு ஒழிப்பதற்கு சார்க் வலய அங்கத்துவ நாடுகள திடசங்கற்பம் பூண்டுள்ளன. இந் நிலையில் பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச நிலைமையைப் புரிந்து கொண்டு விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டுமென்று வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் அரசாங்க சமாதானச் செயலகத்தின் பணிப்பாளருமான பாலித ஹோகன்ன தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுமக்கள் மீதான தாக்குதல் செஞ்சிலுவைச் சங்கம் கவலை

(கொழும்பு)

கடந்த வாரம் இடம்பெற்ற தாக்குதல்களில் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் கடுமையாக அதிகரித்துள்ளது என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கவலையை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் சர்வதேசத்தின் மனிதாபிமான விதிகளை மதிக்க வேண்டும். பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்கள் வடக்கு–கிழக்குப் பகுதிகளில் பெருமளவில் அதிகரித்துள்ளன.

கடந்த வாரம் பொதுமக்களின் பேருந்து மீதான குண்டுவெடிப்பு மற்றும் ஏனைய தாக்குதல்களால் 30 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 50 பேர் காயமடைந்துள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

சந்தேகத்திற்கிடமான பிரதேசங்களைத் தவிர்ப்போம்!
அங்கே வெடிபொருட்களின் ஆபத்துக்கள் இருக்கலாம்
சர்வோதயம்
unicef

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

ICC Cricket World Cup

## இங்கிலாந்தை வென்ற அவுஸ்திரேலியா அரையிறுதிக்கு முன்னேறுவது உறுதி

(ஜமேக்கா)

இங்கிலாந்தை 7விக்கெட்டுக்களால் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா அரையிறுதிக்குச் செல்வதனை உறுதி செய்தது. மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் அன்ரிக்குவாவில் நடைபெற்ற சூப்பர் 8 ஆட்டத்தில் இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகள் மோதின.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் வோகன் முதலில் துடுப்பெடுத்தாடத்தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஹெவின் பீற்றர்சன் 104 ஓட்டங்களையும் இயன் பெல் 77 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஷேன் தைட் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 248 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, அணித்தலைவர் ரிக்கிபொன்டிங், கிளார்க் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 47.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 248 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் ரிக்கி பொன்டிங் 86 ஓட்டங்களையும் மைக்கல் கிளார்க் ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களையும் மத்யூ ஹைடன் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

இவ் வெற்றியுடன் அவுஸ்திரேலிய அணி சூப்பர்-8 ஆட்டத்தில் 8 புள்ளிகளைப் பெற்று அரையிறுதிக்கு முன்னேறுவதனை உறுதி செய்தது. (ச-5)


அனுசரணை

உடனடி வெற்றி

அதிஷ்ட புதையல் தரும் சேமிப்புச் சான்றிதழ்

BOC

முதன்மை வங்கி இலங்கை வங்கியின் இன்னும் ஓர் புதிய அறிமுகம். புதிய சேமிப்புச் சான்றிதழ் பெறும் அனைவர்க்கும் பரிசில்கள் உண்டு.

◄ சேமிப்புச் சான்றிதழின் மினுங்கும் பகுதியில் காணப்படும் பரிசில்கள் இதோ...



வியப்புமிகு பரிசில்கள்

- மோட்டார் கார்கள் (Toyota Corolla & Maruti)
- DVD சிஸ்டம்ஸ்,
- காஸ் குக்கர்,
- கையடக்கத் தொலைபேசிகள்,
- மின் விசிறிகள்,
- வெந்நீர் போத்தல்கள்,
- மின் விளக்குகள்.

இலங்கை வங்கி அறிமுகம் செய்யும் புதுவருட பரிசினைப் பெற்றுக் கொள்ளத் தவறாதீர்கள்.

தேசத்தின் வங்கியாளர்
உடனடி அதிஷ்டம் இலங்கை வங்கியிடமிருந்து!



## இதய அஞ்சலி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் கௌரவ செயலாளர் திரு.இ.குகதாசன் அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி இராசையா தங்கலட்சுமி

அவர்கள் இறையெய்திய செய்தியறிந்து சபை அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(813) சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம்.


## அத்தியாவசியப் பொருட்களுடன் யாழ்.நோக்கி கப்பல் பயணம்

புதுவருடத்தை முன்னிட்டு தேவையான பொருட்கள் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக் கப்பலில் 2800 தொன் உணவுப் பொருட்கள் யாழ்.குடாநாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பி.திவாரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 6 தடவைகள் கப்பல் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் யாழ்.நோக்கி அனுப்பி வைக்கப்பட்டுள்ள அதே வேளை, 3800 மெற்றிக் தொன் பொருட்களுடன் சென்ற கப்பலில் இருந்து பொருட்கள் அங்கே இறக்கப்பட்டுகொண்டிருப்பதாகவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)


## திருமணக்கார்

(குளிரூட்டியது)

வாடகைக்கு



- திருமண வைபவங்கள் [அலங்காரத்துடன்]
- விசேட வைபவங்கள்
- சுற்றுலாக்கள் போன்ற அனைத்துச் சேவைகளுக்கும், புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட]

குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்

தொடர்பு ரட்ணம்,
சோமசுந்தரம் அவன்யூ, சுண்டுக்குளி
யாழ்ப்பாணம்.
T.P: 0777903093,0777246117


## ரசல் ஆனல்டின் மைத்துனர் ரயில் விபத்தில் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கை கிரிகெட் வீரர் ரசல் ஆனல்டின் மைத்துனர் வெள்ளவத்தையில் இடம் பெற்ற ரயில் விபத்தில் கடந்த சனிக்கிழமை பலியாகியுள்ளார்.

ரசல் ஆனல்டின் மைத்துனர் ஸ்டீபன் சண்முகம் வெள்ளவத்தையில் ரயில்வே கடவையில் தொலைபேசியில் உரையாடி கொண்டு நடந்த வேளை ரயில்வே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

தற்போது உலகக்கிண்ண போட்டிகளில் பங்கேற்றுள்ள இலங்கை அணி வீரர் ஆனல்ட், இவ் இறுதிகிரியைகளில் பங்கேற்க மாட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)


# PATRICIAN INSTITUTES

## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

ஆரம்பம்:-25-04-2007

| Course | Duration |
|---|---|
| A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION 1 YEAR |
| B. DIPLOMA IN MICRO SOFT OFFICE | DURATION 6 MONTHS |
| C. DIPLOMA IN TYPE SETTING | DURATION 3 MONTHS |
| D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING | DURATION 4 MONTHS |
| E. DIPLOMA IN DEST TOP PUBLISHING | DURATION 6 MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. | DURATION 3 MONTHS |
| G. INTERNET & E-MAIL | DURATION 1 MONTH |
| H. DIPLOMA IN INTERNET TECHNOLOGY | DURATION 5 MONTHS |

வாகனத் தகுதிச் சான்றிதழ் 2007

2007 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதனை அனைத்து வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

CERTIFICATE COURSES

| | | |
|---|---|---|
| 1.MS WORD-2000 | 6.PASCAL | 11.D BASE FOR WINDOWS |
| 2.MS EXCEL-2000 | 7.d BASE III+ | 12.PHOTO SHOP DELUX |
| 3.MS ACCESS-2000 | 8.PAGE MAKER | 13.ADOBE PHOTO SHOP |
| 4.MS POWER POINT | 9.WINDOWS 95 | 14.QUICK BOOK |
| 5.VISUAL BASIC VER 6.5 | 10.COREL DRAW | |

EACH 3 MONTHS

| | |
|---|---|
| 1.சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) (PITMAN LONDON EXAM PAPER மாதிரி வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 2.சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| 3.மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol & diesel வாகனங்களின் இலகுவான செய்முறை மூலம் கற்பிக்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 4.ஜெனரல் எலக்ரிஸன் (மின்சார இணைப்பு மோட்டார் றிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| 5.வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் (Oscilloscope) (அசைவுகாட்டி) இனை கையாள்வதுடன் கூடிய முழுமையான பயிற்சியும் செய்முறையும்) | காலம் 8மாதங்கள் |
| 6. கடைச்சல் இயந்திர தொழிற் பயிற்சி (ON THE JOB TRAINING) வழங்கப்படும் | காலம் 3 மாதங்கள் |
| 7.மின் ஒட்டுநர் பயிற்சி (ARC WELDING & GAS WELDING ON THE JOB TRAINING) வழங்கப்படும் | காலம் 6 மாதங்கள் |
| 8.மரவேலை (With use of Machinery) (ON THE JOB TRAINING) வழங்கப்படும் | காலம் 6 மாதங்கள் |
| 9.குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |
| 10.PLUMBING | காலம் 6 மாதங்கள் |
| 11.MASONARY | காலம் 6 மாதங்கள் |

குறிப்பு:

1.பயிற்சிக் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தலாம்.
2.வன்செயலால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ்வாழும் மாணவர்கள் ஆதாரங்காட்டி பங்குக்குரவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெறலாம்.
3.பயிற்சிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

REGISTRAR
PATRICIAN INSTITUTE
59,ST.PATRICK'S ROAD,
JAFFNA

T.P NO:021 222 6148 Fax :021 222 6148
E.Mail:SPitee@Slt net.lk

(ட.அ.651)


## புதுவருடதின கொடுக்கல் வாங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல இலங்கை வங்கிக் கிளைகளும் புதுவருடப்பிறப்பு தினமான 14 ஆம் திகதி சனிக்கிழமை சுபநேரமாகிய காலை 11 மணிக்கு வாடிக்கையாளர்களுக்கான கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பிப்பதற்காக விஷேடமாகத் திறந்திருக்கும் என செயற்பாட்டு முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ் சிங்கள புதுவருட தினம் இம் முறை சனிக்கிழமையில் வருவதை முன்னிட்டு 12 ஆம் திகதி வியாழக்கிழமை சகல கிளைகளும் காலை 10 மணி மட்டுமே திறந்திருக்கும் என அவர் அறிவித்துள்ளார். (ச)

## இலங்கை திட்டமிடல் சேவை பரீட்சைக்கு தோற்றுவோருக்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திட்டமிடல் சேவை வகுப்பு II தரம் -II 2006 (2007) இற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைகளில் யாழ்.மாவட்டத்திலிருந்து தோற்றுவதற்காக விண்ணப்பித்தவர்கள் பாதுகாப்பு அனுமதியினைப் பெற்று, அவ் ஆவணத்துடன் அரச சேவையிலிருந்து விண்ணப்பித்தவர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதியன்றும், ஏனையோர் 17 ஆம் திகதியன்றும் மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொண்டு தமது பயண ஏற்பாட்டினை உறுதி செய்து கொள்ளுமாறு யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார். (ச)

## சாதாரண தரப்பரீட்சை பெறுபேறு

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

செ.நிவேதினி 10ஏ, ச.தனுசன் (9ஏ,சி,) கே.சுபாசினி (6ஏ, 3பி, எஸ்,) ச.உஷாந்தினி (6ஏ, 2பி,சி, எஸ்), வை.ரம்மியா (6ஏ, பி, 2சி, எஸ்), செ.தர்மராஜ் (5ஏ, 4பி, எஸ்,) க.குகதர்சினி (5ஏ,2பி,சி,எஸ்,) நி.தனஞ்சினி (5ஏ, பி, 3சி, எஸ்), சிறிரூபன் (4ஏ,2பி,சி,2எஸ்), ப.கௌரிபாலன் (4ஏ,2பி,சி,3எஸ்),சி.பபிலாதனி (3ஏ,5பி,சி), பா.மயூரிகா (3ஏ,4பி,சி, 2எஸ்), ஜெ.நந்தினிதேவி (3ஏ,3பி,சி,3எஸ்), சு.நேருஜா (3ஏ,பி,3சி,2எஸ்),ச.சிவரூபன் (3ஏ,பி, 4சி,எஸ்) (ச)

தனி நபர்கள் அடிக்கடி மறப்பதும் மன்னிப்பதும் உண்டு. ஆனால் சமூகங்கள் ஒருபோதும் அவ்விதம் செய்யா.

—ஆவ்பரி

வலம்புரி

# ரணில் விக்கிரமசிங்காவின் திட்டம் நிறைவேறுமா?

மிக விரைவில் பொதுத்தேர்தலை நடத்துவதற்கான திட்டத்தை பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி மேற்கொண்டுள்ளது.

பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய பெரும்பான்மைப் பலத்தை எதிர்க்கட்சிகளுடையதாக்கி ஆளும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பலத்தை இழக்க செய்வதன் மூலமாக பொதுத்தேர்தலை நடத்துவதே ஐக்கிய தேசியக்கட்சியின் நோக்கமாகும்.

ஐக்கிய தேசியக்கட்சின் நோக்கம் நிறைவேறுவதற்கு ஜே.வி.பி.மற்றும் தமிழ்க்கூட்டமைப்பு ஆகியவற்றின் ஆதரவு தேவையாக இருக்கும்.

அதாவது, ஆளும்சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணையை கொண்டுவருவதனூடாக அரசைக் கவிழ்த்து தேர்தலை நடத்துவதற்கு ஜே.வி.பி. மற்றும் தமிழ்க் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஆதரவு தேவையானதாகும்.

இங்கு ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து செயற்படுவதில் ஜே.வி.பிக்கு உடன்பாடு இருக்காததாயினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது கொள்கைகளுக்கும் உடன்படிக்கைக்கும் ஏற்ப செயற்படவில்லை என்ற ஆதங்க மேலீட்டினால் ஐக்கிய தேசியக்கட்சி கொண்டுவரவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கவேண்டியதோர் தேவை ஜே.வி.பிக்கு இருக்கவே செய்யும்.

அதேபோல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக்கட்சியினால் கொண்டுவரப்பட விருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் என நம்பலாம்.

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரவாக வாக்களிக்கத் தவறும் சந்தர்ப்பத்தில் அது அரசியல் புலத்தில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் ஐக்கிய தேசியக்கட்சியுடன் சேர்ந்து அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வாக்களிக்குமென நிறுத்திட்டமாக கூறமுடியும்.

ஆக ஜே.வி.பி.,தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைவதன் மூலம் அரசை கவிழ்த்து பொதுத்தேர்தலை நடத்தும் ஐக்கிய தேசியக்கட்சியின் திட்டம் அரங்கேற முடியும்.

எனினும் ரணில் விக்கிரமசிங்காவின் திட்டம் எந்தளவு தூரம் நிறைவேறும்என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். எதுவாயினும் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர வேண்டிய காலம் விரைவானது என்பதுடன் இதில் ஏற்படக்கூடிய காலதாமதம் ஐக்கிய தேசியக்கட்சிக்கே பாதகமாக அமையும் என்பதும் கவனத்திற்குரியதாகும்.

அதாவது கட்டுநாயக்கா விமானத்தளத்தின் மீது விடுதலைப்புலிகள் நடத்திய விமானத்தாக்கு தலைமையமாக வைத்தே பொதுத்தேர்தலை எதிர்கொள்வது ஐக்கிய தேசியக்கட்சியின் உள் நோக்கமாகும்.

இதனைச் செய்வதற்காக ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விரைவுபடுத்த வேண்டியது கட்டாயமானதாகும். அப் போதுதான் ரணில் விக்கிரம சிங்கவின் திட்டம் நிறைவேறும் வாய்ப்பைப் பெறும்.

# சர்வசித்து புதுவருடப் பிறப்புக் கருமம்

வாக்கிய பஞ்சாங்கப்படி சித்திரை மாதம் (14.04.2007) முதலாம் திகதி சனிக்கிழமை சதய நட்சத்திர மூன்றாம் பாதத்தில் அபரபட்ச துவாதசித் திதியில் சுப்பிர நாமயோகத்தில், கவுலவக் கரணத்தில், மிதுன லக்கினத்தில் மகர நவாம்சத்தில், சுக்கிர காலவேளையில், சந்திரன் சூக்குமவோரையில், தாமத குணவேளையில், முற்பகல் 10.42 மணிக்கு புதிய சர்வசித்து வருடம் பிறக்கின்றது. அன்று காலை 6.42 மணி முதல் பிற்பகல் 2.42 மணிவரை விஷு புண்ணிய காலமாகும்.

இப் புண்ணிய காலத்தில் யாவரும் சங்கற்பித்து, மருத்து நீர் தேய்த்து, சிரசில் கொன்றை இலையும், காலில் ஆல் இலையும் வைத்து நீராடி கறுப்புக்கரை புகைநிறமுள்ள பட்டாடையாயினும் இந் நிறக்கரை அமைந்த புதிய ஆடையாயினும் உடுத்து மரகத, பவளம் இழைத்த ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி விநாயகர் முதலிய குல தெய்வ வழிபாடு செய்து, சூரியனுக்கு பொங்கல் பூசைகள் செய்து, குரு, பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று உற்றார், உறவினர், நண்பர்களுடன் அளவளாவி, அறுசுவைகளுடன் பிட்டு, வேப்பம் பூ என்பனசேர்த்தருந்தி, தாம்பூலம் தரித்து, கண்ணாடி, தீபம், [illegible] களை தரிசித்து புதிய வரு[illegible]

*சங்கிரம தோச நட்சத்[illegible]*

திருவாதிரை, புனர்பூசம் [illegible] சுவாதி, அவிட்டம் 3.4 ஆம் கால்கள் [illegible] பூரட்டாதி 1.2.3 ஆம் கால்கள், இவற்றுள் பிறந்தோர் தவறாது மருத்து நீர் தேய்த்து, ஸ்நானம் செய்து, தான தர்ம வழிபாடுகளை விசேடமாகச் செய்து, சங்கிரம தோஷங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

*மருத்து நீர் தயாரித்தல் முறை:-* தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு இவைகளை சுத்தமான நீரில் இட்டு காய்ச்சிக்கொள்ளலாம்.

*கைவிசேடம்;*

14.04.2007 சனிக்கிழமை முற்பகல் 10.51 – நண்பகல் 12.02 மணிவரை சுப நேரம்.

15.04.2007 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.04. தொடக்கம் நண்பகல் 11.58 மணிவரை. சுபநேரம். (சு)

# தமது நகைகளை அடகு வைத்தே மக்கள் புத்தாண்டை கொண்டாட முயற்சிக்கின்றனர்

## ஐக்கிய தேசியக்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் கொள்வனவு செய்த நகைகளை அடகு வைத்தே மக்கள் புத்தாண்டை கொண்டாடுவதற்கு முயற்சி செய்கின்றனர் என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தினால் சிங்கள–தமிழ் புத்தாண்டை கொண்டாடுவதா? மூன்று வேளை சாப்பிடுவதா? என்ற நிலை தோன்றியுள்ளதுடன் புத்தாண்டில் பாற்சோறு சாப்பிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் ஐக்கிய தேசியக்கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக்கட்சியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரளை தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அரசாங்கம் ஊடகங்கள் வாயிலாகவே குறைத்துள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலைகளை நாடளாவிய ரீதியில் குறிப்பிட்ட ஒரு ஒரு பிரிவினரே கட்டுப்படுத்தியுள்ளனர்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதனால் கிராமங்களிலுள்ள கடைகள் இழுத்து மூடப்பட்டுள்ளன. அத்தியாவசிய பொருட்களின் விலைகள் மார்ச் 15 ஆம் திகதி முதல் ஏப்ரல் 30 ஆம் திகதிவரை குறைக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளதனால் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு பின்னர் அத்தியாவசிய பொருட்களின் விலை கட்டாயமாக அதிகரிக்கும் என்ற செய்தியை அரசாங்கம் முன் கூட்டியே அறிவித்துவிட்டது.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் தேங்காய் 27 ரூபாவிற்கும் அரிசி 40 ரூபாவிற்கும் விற்கப்படுவதனால் புத்தாண்டில் பாற்சோறு எப்படி உண்ணுவது என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன நாட்டில் புடைவைக் கைத்தொழிலை ஆரம்பித்ததினால் இன்று குறைந்த விலைக்கு ஆடைகளை கொள்வனவு செய்ய கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் ஆட்சி ஏறியதிலிருந்து 38 பில்லியன் ரூபா அச்சடிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் 7.6 வீதம் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இந் நிலையில் அச்சடிக்கப்பட்ட பணத்திற்கு என்ன? நடந்துள்ளது என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் சேமித்த பணத்தின் மூலமாக கொள்வனவு செய்த தங்கப் பொருட்களை அடகுவைத்தே மக்கள் 2007 ஆம் ஆண்டு சிங்கள–தமிழ் புத்தாண்டை கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற யுத்தம் காரணமாகவே அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன என்ற பொய்யை அரசாங்கம் மக்கள் மீது திணிக்க முயற்சி செய்து வருகின்றது. அதற்கு முற்றுப்புள்ளி வைத்து இந்நாட்டில் சகல இன மக்களும் நிம்மதியாக வாழக் கூடிய சூழலை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி கூடிய விரைவில் ஆட்சி பீடம் ஏறும் என்றார் அவர். (எ-5)

# அரசாங்கத்தின் அறிக்கைக்கு சர்வதேச கிரிக்கெட்சபை கண்டனம்

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச் சபையினால் நடத்தப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு தம்மால் சில உறுதிமொழிகள் வழங்கப்பட்டது தொடர்பாக வெளியாகிய ஊடகங்களின் செய்திகளுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை தனது மறுப்பை தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கும் சர்வதேச மன்னிப்புச்சபைக்குமிடையில் நடைபெற்று வரும் மோதல்களில் தாம் தலையிடவில்லை என சர்வதேச கிரிக்கெட் சபையின் தொடர்பாடலுக்கான அதிகாரியான ஜேம்ஸ் பிற்ஸ்ஜெரால்ட் தெரிவித்துள்ளார்.

கரீபியன் தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கையில் அதிகரித்துள்ள மனித உரிமை மீறல்களை முன்நிறுத்தி, 'விதிகளின் அடிப்படையில் விளையாடுங்கள்' என்னும் போராட்டத்தை சர்வதேச மன்னிப்புச் சபை முன்னெடுத்து வருகிறது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம் பெற்று வரும் மோதல்களில் சிக்கிப்போயுள்ள மக்களின் மனித உரிமைகளை காப்பதில் இரு தரப்பும் அக்கறை செலுத்த வேண்டுமென மன்னிப்புசபை கோரி வருகிறது.

மன்னிப்புச் சபையின் இந்த நடவடிக்கை சூப்பர் 8-ல் தெரிவாகி தற்போது விளையாடிக்கொண்டிருக்கும் தமது அணியினரின் மன உறுதிகளை அதிகம் பாதிக்குமென இலங்கை அரசாங்கம் தமது கடும் எதிர்ப்பை சர்வதேச கிரிக்கெட் சபை, மன்னிப்புச்சபை ஆகியவற்றுக்குத் தெரிவித்திருந்தது.

ஆனால் தம்மால் உலகக் கிண்ணப் போட்டியில் மட்டுமே கவனத்தைச் செலுத்த முடியும் எனவும் ஏனையவற்றில் அல்ல எனவும் சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. மோதல்களில் ஈடுபட்டு வரும் இரு தரப்புக்களும் மனித உரிமை மீறல்களை கண்காணிக்க அனைத்துலக கண்காணிப்புக்குழுவை அமைப்பதை அனுமதிக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தி வெள்ளைப் பந்துகளில் கையொப்பங்கள் சேகரிக்கப்படுகின்றன. அதன் பின் கையொப்பமிட்ட அப் பந்துகளை இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் அனுப்பிவைக்கப்படும் எனவும் அவர் கூறினார். (எ-5)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் யாழ்.,முல்லைத்தீவில் திருத்தப்படவில்லை

சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் தொடர்பான விபரங்களை அறிந்து கொள்வதற்காக கல்வியமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த, அண்மையில் கல்வியமைச்சில் நடத்திய மாநாட்டில் அதிர்ச்சி தரும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவுப் பிரதேச பாடசாலைகள் எதுவுமே இதுவரை மீள நிருமாணிக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார். நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர். கூடவே நன்கொடையாளர்களும் சமுகமளித்திருந்தனர்.

நாட்டின் சகல பகுதிகளின் கல்விப் பணிப்பாளர்களுடன் நடைபெற்ற இக் கலந்துரையாடலின் போது மீள் நிர்மாணம் நடைபெறும் பாடசாலைகளில் தற்போதைய நிலை பற்றி விரிவாக ஆராயப்பட்டது. மிகவும் தாமதமாக மீள் நிர்மாணத்தில் ஈடுபடும் நன்கொடையாளர்கள் தொடர்பாக கவனமெடுக்கப்பட்டது.

ஆனால் இக் காரணங்களுக்கு முற்றிலும் வேறுபட்ட வகையில் வடபுல முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட சுனாமிப் பாதிப்புற்ற பாடசாலைகளில் ஒன்றாவது இதுவரை மீள் நிர்மாணம் செய்யப்படாமை மிகவும் அதிர்ச்சி தரும் விடயமாகும்.

போர்ச்சூழலே நன்கொடையாளர்கள் முன்வராமைக்கு காரணமாக கூறப்படுகின்றது. முல்லைத்தீவில் மாத்திரம் 22 பாடசாலைகள் சுனாமியால் பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் இதுவரை ஒன்று கூட பூரணமாக திருத்தப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## போப் ஆண்டவரின் செய்தி

# இலங்கை அரசின் மீது அழுத்தத்தை அதிகரிக்கும்

## பகுப்பாய்வாளர் கருத்து

போப் ஆண்டவர் 16 ஆம் பெனடிக் தனது உயிர்த்த ஞாயிறு தின உரையின்போது இலங்கை இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

அவரது இந்தச் செய்தியானது இலங்கை அரசின் மீது பேச்சுவார்த்தைக்கான அழுத்தத்தை அதிகரிக்கும் என தெற்காசிய விவகாரங்களுக்கான பகுப்பாய்வாளர் பேராசிரியர் சகாதேவன்,

இலங்கையில் நிலவும் பிரச்சினைகள் உலகஅளவில் பலரது கவனத்தை ஈர்த்துள்ளன என்பது இந்த உரையின் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது எனவும் அவரது செய்தியானது இலங்கை அரசாங்கத்தை வருத்தப்பட வைக்கும் வாய்ப்புள்ளது எனவும் சகாதேவன் மேலும் தெரிவித்தார்.

பி.பி.ஸி.தமிழோசைக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். போப் ஆண்டவரின் செய்தியானது உலகளவில் பல நாடுகள் இலங்கையின் பால் கொண்டுள்ள வருத்தத்தை வெளிப்படுத்துவதாகவுள்ளது என்றும் அவரது செய்தியை உலக நாடுகள் தட்டிக்கழிக்காமல் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் ஒரு அழுத்தத்தைக் கொடுக்க வாய்ப்புள்ளது என்றும் பேராசிரியர் சகாதேவன் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை போப்பின்உரை எந்தளவிற்கு இலங்கை அரசாங்கத்திடம் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும்என்பது கேள்விக்குறியே எனவும் அவர் மேலும் கருத்துக் கூறியுள்ளார். போப் பெனடிக் ஜேர்மன் நாட்டைச் சேர்ந் தவர் எனவும் அந்த நாடு ஏற்கனவே இலங் கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் காரணமாக பல வகையான பொருளாதார உதவிகள்ளை நிறுத்தியுள்ளது என்பதையும் பேராசிரியர் சகாதேவன் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

# மண்டபம் அகதி முகாமிலிருந்த மூன்று இளைஞர்கள் கைது

இந்தியாவின் மண்டபம் அகதி முகாமில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று இளைஞர்களை தமிழகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கையில் நிலவும் அசாதாரண சூழல் காரணமாகப் பலர்அடைக்கலம் தேடி இந்தியாவிற்குச் சட்டவிரோதப் படகு மூலம் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் இலங்கையிலிருந்து சென்ற 50 பேர் விசாரணைகளின் பின்னர் மண்டபம் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அகதிகளுடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடுருவலைத் தடுக்கும் வகையில் இந்தியப்பாதுகாப்புத் தரப்பினரால் கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த வாரம் அகதிகளாகச் சென்றவர்களில் மூன்று இளைஞர்கள் மேல் சந்தேகம் கொண்ட தமிழகப் பொலிஸார் விசாரணையினை மேற்கொண்டதுடன் அவர்களை செங்கல்பட்டு விசேட முகாமில் தடுத்து வைத்துள்ளனர்.

மன்னார், யாழ்ப்பாணப் பகுதிகளைச் சேர்ந்த தேவயோகேஸ்வரன் (வயது-24), சுகந்தன் (வயது-22), ஜஸ்ரின்ராஜ் (வயது-23) ஆகியோரே கைது செய்யப்பட்டதாகத் தமிழகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச-3)

## கோத்தபாய கொலை முயற்சி சந்தேக நபர்களுக்கு விளக்க மறியல்

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கொலை செய்யும் முயற்சிக்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் உள்ள இவ் இருவரையும் தொடர்ந்து 30 நாள்கள் தடுப்பு காவலில் வைக்குமாறு மேல் நீதிமன்ற நீதிபதி சறோஜினி குசலா வீரவர்த்தன நேற்றுப் புலனாய்வுப் பிரிவிற்கு உத்தரவிட்டுள்ளார். (ச-5)

## சீற்ற...

எனினும் மாலை வேளைகளில் கடும் மழை பெய்யுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் மேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு கரையோரங்களில் கடும் மழை பெய்யுமெனவும் கிழக்கு ஊவா மாகாணங்களில் சிறியளவில் மழை பெய்யக் கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-5)

## சமாதானப்...

வுள்ளமை குறித்துக் கண்காணிப்புக் குழுவிடம் எழுத்து மூலம் அறி விப்பொன்றையும் முன்வைத்ததாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகின.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைக் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் சந்தித்ததாகவும் அது முன்னேற்பாடு செய்யப்பட்ட ஒரு சந்திப்பு எனவும் குறிப்பிட்டார்.

மோதல்கள் மற்றும் நாட்டின் நிலைமைகள் குறித்து இதன்போது கலந்துரையாடியதாக அவர் கூறினார். முக்கியமாக மோதல்களில் பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்து இந்தச் சந்திப்பின்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

எனினும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்துக் கருத்துக்கள் முன்வைக்கப்படவில்லை எனவும் இது தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் கருத்துக்கள் எதனையும் முன்வைக்கவில்லை என்றும் தொபினூர் ஓமர்சன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-3)

## பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு...

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது. சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நோக்கம் புலிகளுக்கு இருந்தால் அதற்கான சமிக்ஞையை அவர்கள் வெளிக்காட்டலாம் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் கொழும்பு ஊடகம்ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் இந்தியாவில் இடம்பெற்ற சார்க் உச்சி மாநாட்டின் போது சார்க் வலய நாடுகளில் பயங்கரவாதத்தை முழுமையாக ஒழிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

தற்போதைய நிலைமையில் சர்வதேச சமூகம் பயங்கரவாதத்தை ஒழிக்கும் செயற்பாட்டுக்கு முக்கியத்துவம் வழங்கி வருகின் றது.

சமாதானப் பேச்சுவார்த்தை என்ற விடயத்தில் அரசாங்கம் உறுதியாகவே இருக்கின்றது. எந்த நிமிடத்திலும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது.எந்த நிமிடத்திலும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது.

ஆனால் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது விடுதலைப் புலிகளின் கைகளிலேயே தங்கியுள்ள்து. புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கின்றது. சமாதானப் பேச்சுவார்த்தையில் புலிகள் கலந்து கொள்வதற்கு தற்போது சிறப்பான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றார். (ச-5)

## பொதுமக்கள்...

இதுதொடர்பாக நாம் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம். நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் பொதுமக்கள் பாதிக்கப்படுவது தொடர்பாக நாம் வேதனையடைக்கின்றோம்.

மோதல்களில் ஈடுபடும் தரப்புக்கள் சர்வதேச மனிதாபிமான விதிகளையும் கொள்கைகளையும் மதித்தல் வேண்டும். அவர்கள் எப்போதும் பொதுமக்களுக்கும் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை அறிந்திருத்தல் வேண்டும்.

எல்லா நிலைகளிலும் சட்டமானது பொதுமக்கள் மீதான நேரடியான தாக்குதல்களை எதிர்க்கின்றது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ச-5)

## கடற்படை...

துப்பாக்கிப் பிரயோகத்தில் மற்றுமொரு மீனவர் படுகாயமடைந்தார். இதனைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் இலங்கைக் கடற்படையினருக்கு எதிராக பலத்த கோஷங்களை எழுப்பியதுடன் இலங்கைக் கடற்படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலிலிருந்து தமிழக மீனவர்களைக் காப்பாற்ற கச்சைதீவை மீட்க மத்தியஅரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

இதில் பங்கேற்ற விடுதலைச் சிறுத்தைகளின் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் கருத்துத் தெரிவிக்கையில், அண்மைக் காலமாக தமிழக மீனவர்களைச் சிங்களக் கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்து வருகின்றனர். இது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

ஆகவே தமிழக மீனவர்களைப் பாதுகாக்க ஒரே வழி கச்சைதீவை இலங்கை அரசிடமிருந்து மீட்பதுதான். இதற்கு மத்திய அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டும். அவ்வாறு கச்சதீவு மீட்கும் வரை தமிழக மீனவர்களுக்குத் தற்காப்புப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கூறினார். (ச)

## போர்நிறுத்த உடன்படிக்கை இல்லாமல்...

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையின் சமாதான செயற்பாடுகளில் இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டிய காலம் வந்துள்ளது. தமிழகத்தில் ஆறு கோடி தமிழ்மக்கள் இருப்பதனால் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா பொறுப்புடன் செயற்படும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது என்று நீதி மற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஆட்சியிலிருக்கும் எந்த அரசாங்கமும் இந்தியாவைப் பகைத்துக் கொள்ளக் கூடாது ... முடியாது என்றும் அவர் மேலும் கூறினார்.

சமாதானச் செயற்பாடுகளின் தற்போதைய நிலைமைகள் குறித்து கொழும்பு ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது,

ஜே.வி.பி. தற்போது இந்தியாவை விமர்சிக்க ஆரம்பித்துள்ளது. ஜே.வி.பி.அடிக்கடி இந்தியா தொடர்பான தனது நிலைப்பாட்டில் மாற்றங்களைக் கொண்டு வரும். ஒரு சமயம் ஜே.வி.பி.இந்தியாவை எதிர்க்கும். இன்

அரசாங்கம் எப்போதும் இந்தியாவை தனது சகோதரனாகவே நோக்குகின்றது. இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா நேரடியாகத் தலையிட்டுச் செயற்பட வேண்டும்.

இந்தியாவின் தமிழகத்தில் ஆறு கோடி தமிழ் மக்கள்இருக்கின்றனர் என்பதனை நாம் மறந்து விடக் கூடாது. இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் இந்தியா காத்திரமான பங்களிப்பை வழங்கும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு உண்டு.ஏனைய நாடுகளின் ஒத்துழைப்பையும் அரசாங்கம் பெறவேண்

A/L 2009
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்:- 15/04/2007

(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்:- 15/04/2007
ஞாயிறு காலை 8 மணி
DMI
JAFFNA
(c-696)

பெரேரா தெரிவித்தார்.

ஆட்சியிலிருக்கும் எந்த அரசாங்கமும் இந்தியாவைப் பகைத்துக் கொள்ளக் கூடாது. தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட வேண்டும். ஜே.வி.பி. கூறுவது போன்று கிணற்றுத் தவளைகள் போல அரசாங்கத்தால் செயற்பட

இந்தியா தொடர்பான தனது நிலைப்பாட்டில் மாற்றங்களைக் கொண்டு வரும். ஒரு சமயம் ஜே.வி.பி.இந்தியாவை எதிர்க்கும். இன்னொரு சமயத்தில் ஆதரிக்கும்.

ஆனால் ஜே.வி.பிக்குத் தேவையான வகையில் இந்தியா தொடர்பான நிலைப்பாட்டை அரசாங்கத்தால் மாற்றிக் கொண்டிருக்க முடியாது.

களிப்பை வழங்கும் என்ற நம்பி
சாங்கத்திற்கு உண்டு.ஏனைய ந
ஒத்துழைப்பையும் அரசாங்கம் ெ
டும்.

இதேவேளை தற்போது சர்வதே
பயங்கரவாதத்திற்கு எதிரான கடு
திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.
புரிந்து கொண்டு புலிகள் சமாத
சுக்கான அறிவிப்பை வெளியிட

அதேவேளை அரசாங்கமும்
சினைத் தீர்வு விடயத்தில் ஆக்கபூ
செயற்படுவதுடன் சகல இன மக்
றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்
வைக்க வேண்டும்.


தற்போது நடைமுறையிலி
போர்நிறுத்த உடன்படிக்கை பல
பட வேண்டும். அல்லது புதிய பே
உடன்படிக்கை ஒன்று உருவ
வேண்டும்.

காரணம் பலமான போர்நிறு
படிக்கையில்லாமல் பேச்சுவார்
நடத்தமுடியாது. எதிர்வரும் மாதங்
கையின் அரசியலில் பல மாற்ற
கொண்டு வரலாம். காரணம் இ
னைக்கான அரசியல் தீர்வை
சுதந்திரக் கட்சி விரைவில் முன்ன


இந்நிலையில் அந்தத் தீர்வ
தொடர்பாக புலிகள் தமது கருத்
வைக்க வேண்டும். நாங்கள் ஒற்
யா? சமஷ்டியா? என்ற வார்த்
குழம்பிக் கொண்டிருக்காமல் பிர
கான தீர்வு தொடர்பாக ஆக்கபூர்
திக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறி

CARITAS HUDEC

# 1 ம் ஆண்டு நினைவு தினம்



கியூடெக் / கரித்தாஸ் நிறுவனத்தில் பணியாற்றி அகால மரணம் அடைந்த ஊழியர்களின் 1 ம் ஆண்டு நினைவையொட்டி அஞ்சலி செலுத்தும் சக பணியாளர்கள்.



ச.கா.பத்மநாபன்
மலர்வு 08/12/1951

உதிர்வு :- 10/04/2006

செ.பிரதீப்குமார்
மலர்வு 28/12/1977

(c-697)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.04.2007 இல் அச்சிட்டு வெளி